# Sample Question paper (Tamil )

மாதிரி வினாத்தாள்

பத்தாம் வகுப்பு (Class - X )

அக்டோபர் 2010 - மார்ச் 2011

## II - Term (OCT 2010 - MARCH 2011)

Max. Marks : 80 — Time Allowed : 3 hours

*மொ.மதிப்பெண் கள்: 80* — *கால அளவு : 3 மணி*

The question paper is diveded in to four sections:

***இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.***

| | | |
|---|---|---|
| **SECTION : A** | Reading comprehension | - 15 Marks |
| ***பிரிவு : அ*** | ***படித்தல் (உரைநடைப் பகுதி)*** | ***-15 மதிப்பெண்கள்*** |
| **SECTION : B** | **Writing** | - 15 Marks |
| ***பிரிவு : ஆ*** | எழுதுதல் | ***-15 மதிப்பெண்கள்*** |
| **SECTION : C** | Grammar | - 15 Marks |
| *பிரிவு : இ* | இலக்கணம் | ***-15 மதிப்பெண்கள்*** |
| **SECTION : D** | **Literature / Text Books** | - 35 Marks |
| *பிரிவு : ஈ* | ***இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள்*** | ***-35 மதிப்பெண்கள்*** |

---

★ எல்லா வினாக்களும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பிரிவு - அ

படித்தல் - 15 மதிப்பெண்

***1. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)***

நீர் நிறைந்த ஏரியைப் பறவைகள் நாடி வருவதைப் போன்று பண்டைத் தமிழகத்தில் தமிழின் சுவையை அறிந்த மன்னர்களைத் தேடி அறிஞர்கள்

செல்வது இயல்பாக இருந்தது. தம்மை நாடி வந்த புலவர்களைத் தார் வேந்தரும் அகமகிழ்ந்து வரவேற்றனர். புலவர்களால் பாடப்படுவதை அவர்கள் பெறற்கரும் பேறாகக் கருதினர். அரியாசனத்திற்கு நிகரான சரியாசனம் தந்து, பற்பல பரிசில்களை அளித்து அச் சான்றோர்களைப் பெருமைப் படுத்தினர். அவர்களின் அறிவுரைகளைச் செமடுத்துக் கேட்டனர். அதன் விளைவாக அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர். இதனால் நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் பெருமதிப்பு ஏற்பட்டது. ``கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே'' என்ற முறையில் கல்வியின்பால் ஆர்வம் நிறைந்து வளர்ந்தது.

**வினாக்கள்**

(i). பண்டைத் தமிழ் மன்னர்கள் யாரை நாடிச் சென்றனர்? *(1)*

அ. மன்னர்கள்
ஆ. மக்கள்
இ. புலவர்கள்
ஈ. மாணவர்கள்

(ii). தார்வேந்தர் அகமகிழ்ந்து வரவேற்பது *(1)*

அ. பெரியோர்களை
ஆ. புலவர்களை
இ. மக்களை
ஈ. வேந்தர்களை

(iii) தார்வேந்தர் புலவர்களிடமிருந்து கேட்டது *(1)*

அ. அறிவுரை
ஆ. தெளிவுரை
இ. பதவுரை
ஈ. விளக்கவுரை

(iv) புலவர்களின் கூற்றினால் மன்னர்கள் நாட்டில் *(1)*

அ. அறத்தை நிலைநாட்டினர்
ஆ. மக்களிடம் அறத்தை வலியுறுத்தினர்
இ. அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர்
ஈ. பகையின்றி வாழக் கற்றுக் கொண்டனர்

(v) நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் ஏற்பட்டது (1)

அ. நன்மதிப்பு

ஆ. பெரு மதிப்பு

இ. வரவேற்பு

ஈ. பெருஞ் சிறப்பு

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

அகத்தை நல்ல எண்ணங்களால் தூய்மை செய்வது போலப் புறத்தை நீராலும் காற்றாலும் ஞாயிற்றொளியாலும் தூய்மை செய்தல் வேண்டும். நீரும் காற்றும் ஒளியும் மனிதனை வளர்க்கும் இயற்கைத் தெய்வங்கள் ஆகும். ஊற்று நீரில் நாள்தோறும் காலையில் தலை முழுகல் வேண்டும். மூழ்குதற்குத் தண்ணீரே சால்புடைத்து. நரம்புகட்குத் திண்மையும் உரமும் ஊட்டும் நீர்மை தண்ணீருக்குண்டு. நறுந் தண்ணீர் கிடைக்காவிடில் வெந்நீரில் குளிப்பது நலம். வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குளிப்பது நலன் பயக்காது. நோயாளர், மெலியர், ஒரு சில மூளை உழைப்பாளர் முதலியோர் வெந்நீரில் மூழ்கல் நலமென்று சில மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். தண்ணீரினும் வெந்நீர் அழுக்கை விரைவில் போக்கும். ஆனால் தண்ணீரைப் போல் வெந்நீர் நரம்புகளுக்குத் திண்மை தராது.

**வினாக்கள்**

(i) அகத்தை தூய்மை செய்வது (1)

அ. இறைவன் அருள்

ஆ. வழிபாடு

இ. பிறருக்கு நன்மை செய்தல்

ஈ. நல்ல எண்ணங்கள்

(ii) நீரும் காற்றும் வெளியும் மனிதனை வளர்க்கும் (1)

அ. இயற்கைத் தெய்வங்கள்

ஆ. பிரபஞ்சங்கள்

இ. மும்மூர்த்திகள்

ஈ. இயற்கை அண்டங்கள்

(iii) திண்மை என்பதன் பொருள் *(1)*

அ.உரம்

ஆ. சிறப்பு

இ. பெருமை

ஈ. மகிழ்ச்சி

(iv) நீர்மை என்பதன் பொருள் *(1)*

அ. நீரிலுள்ள மை

ஆ. சூடு

இ. மென்மை

ஈ. இயல்பு

(v) வெந்நீரையும் தண்ணீரையும் கலந்து குளிப்பது *1)*

அ. நலம் பயக்கும்

ஆ. நலன் பயப்பதாகாது

இ. தூய்மை பயக்கும்

ஈ. தெளிவு பயக்கும்

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

கடல்வாழ் உயிரினங்களில் கணவாய் என்பது ஒரு வகை. கணவாய்களுக்குக் கால்கள் தலையிலிருந்தே முளைத்திருக்கும். அதனால் இவற்றைத் தலைக்காலிகள் எனவும் அழைப்பர். கணவாயில் பலவகை உண்டு. ஒட்டுக் கணவாய், கூந்தற் கணவாய், பேய்க் கணவாய் என்பன அவை. கடற்கரையோரங்களிலும் கடலின் ஆழமான பகுதிகளிலும் அவை வாழ்கின்றன. கடற்பாறைகளிலும் ஊனத் திட்டுகளின் இடையிலும் இவை காணப்படுகின்றன. கணவாயின் உடல் நுங்கைப் போல மிருதுவாக இருக்கும். கணவாய்க்கு எட்டு முதல் 10 கால்கள் வரை உண்டு. கால்களின் நடுவில் இதன் வாய் அமைந்துள்ளது. வாயின் தாடைகள் கிளியின் மூக்கு போல அமைந்திருக்கும். கணவாய்கள் வேண்டும் போது தம் நிறத்தை மாற்றிக் கொள்ளும். இவை தம் உடம்பிலிருந்து 'செம்பியர்' என்ற மையைக் கக்குவதால் அவற்றைத் தின்ன வரும் விலங்குகள் மீது பட்டு அவை மோப்ப உணர்ச்சியற்றுப் போகும். இவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

**வினாக்கள்**

(i) கணவாயின் வாய் எங்கு அமைந்துள்ளது? *(1)*

அ. தலையில்

ஆ. கழுத்தில்

இ. வயிற்றுப் பகுதியில்

ஈ. கால்களின் நடுவில்

(ii) கணவாயின் உடல் எது போல் அமைந்துள்ளது? *(1)*

அ. பூனையைப் போல் மென்மையாக

ஆ. புறாவைப் போல் கருமையாக

இ. பஞ்சினைப் போல் மென்மையாக

ஈ. நுங்கைப் போல் மிருதுவாக

(iii) கணவாய்க்கு எத்தனை கால்கள் உண்டு? *(1)*

அ. 8 கால்கள்

ஆ. 6 கால்கள்

இ. 6 முதல் 8 கால்கள்

ஈ. 8 முதல் 10 கால்கள்

(iv) கணவாய்களைத் தலைக்காலிகள் என்று அழைக்கக் காரணம் *(1)*

அ. தலை காலியாக இருப்பதால்

ஆ. கார்களில் தலை இருப்பதால்

இ. கால்கள் தலையிலிருந்தே முளைத்திருப்பதால்

ஈ. வேண்டும் போது நிறத்தை மாற்றிக் கொள்வதால்

(v) கணவாய்கள் எவ்வாறு இனவிருத்தி செய்கின்றன? *(1)*

அ. குட்டி போட்டு

ஆ. செம்பியர் என்னும் மையைக் கக்கி

இ. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து

ஈ. உடலின் நிறத்தை மாற்றி

## பகுதி – ஆ

*1.* உன் ஊர் பக்கம் ஏற்பட்ட நில அதிர்ச்சியையும் அதில் உனக்கு ஏற்பட்ட அனுபவமும் குறித்து உன் நண்பனுக்கு/ தோழிக்கு கடிதம் எழுதுக. **(6)**

*(அல்லது)*

உன் சிற்றூருக்குப் பேருந்து வசதி செய்து தர போக்குவரத்து ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

★ உமது முகவரி: அருண்/ அருணா, எண் 5, செந்தமிழ் நகர், பம்மல், சென்னை எனக் கொள்க.

2. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.** **(6)**

அ. வாழ்வை வளமாக்கும் எரி சக்தி - மின்சாரம் தயாரிப்பில் பலவகை முறைகள் - என்றும் கிடைக்கும் சூரிய சக்தி - மக்களுக்கு விழிப்புணர்வு - தொழில் வளர்ச்சி- பொருளாதாரத்தில் அதன் பங்கு - பயன்படுத்துவோம் - பயன் பெறுவோம்

ஆ. கவிதை, கவிஞன் - காலத்தை வெல்லும் படைப்புகள் - படைப்பாளனின் பங்கு - சமுதாய மாற்றங்கள் - உன்னத சமுதாயம்

இ. தேசிய ஒருமைப்பாடு - அடிமை வாழ்வின் அவலம் - விடுதலை வேட்கை - வேற்றுமையில் ஒற்றுமை - ஒருமைப்பாட்டின் அவசியம் - இந்தியாவின் தன்மை - பண்பாட்டுப் பிணைப்பு - ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

3. **உனது ஊரில் நடைபெற்ற சிறு சேமிப்பு முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.** **(3)**

**(அல்லது)**

**உனது பள்ளியில் நடைபெற்ற நிலத்தடி நீர் பாதுகாப்பு முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.**

## பகுதி - இ

1. **சான்று தருக: (எவையேனும் மூன்று மட்டும்)** **(3)**

(i) நேரசை

அ. பல

ஆ. சில

இ. பலர்

ஈ. சொல்

(ii) சொல் பின்வருநிலை அணி

அ. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்

ஆ. தன்னைத் தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

இ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

ஈ. உள்ள முடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

(iii) கூவிளம்

அ. காப்பான்
ஆ. காக்கினென்
இ. மனிதன்
ஈ. சினங்காப்பான்

(iv) தேமா

அ. குரங்கு
ஆ. விலங்கு
இ. சிங்கம்
ஈ. புலி

(v) கருவிளம்

அ. பூ மகள்
ஆ. திம்மன் மகள்
இ. கலை மகள்
ஈ. மண் மகள்

**2. நிரப்புக. *(எவையேனும் மூன்று மட்டும்)* (3)**

(i) ஆசிரியப்பா -------- பெற்று வரும்.

அ. செப்பலோசை
ஆ. அகவலோசை
இ. துள்ளலோசை
ஈ. தூங்கலோசை

(ii) செய்யுளில் ஒரு பொருள் தரும் பல சொற்கள் வருவது ------- ஆகும்.

அ. பொருள் பின்வருநிலையணி

ஆ. சொல் பினவரு நிலையணி

இ. சொற் பொருள் பின்வருநிலையணி

ஈ. தற்குறிப்பேற்ற அணி

(iii) ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்தலும் பழிப்பது போலப் புகழ்வதும் ------------- அணியாகும்

அ. புகழ்ச்சியணி

ஆ. இரட்டுற மொழிதல் அணி

இ. வஞ்சப் புகழ்ச்சி அணி

ஈ. தற்குறிப்பேற்ற அணி

(iv) வெண்பாவின் பொது இலக்கணத்தோடு இரண்டு அடிகளைக் கொண்டதாய் ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது ---- ஆகும்.

அ. நேரிசை வெண்பா

ஆ. சிந்தியல் வெண்பா

இ. பஃறொடை வெண்பா

ஈ. குறள் வெண்பா

(v) கண்ணையன் என்ற சொல்லுக்கு வாய்பாடு ------- ஆகும்.

அ. கருவிளங்காய்

ஆ. தேமாங்காய்

இ. புளி மாங்காய்

ஈ. கூவிளங்காய்

**3. கூறியவாறு செய்க.** *(எவையேனும் மூன்றை மட்டும்)* **(3)**

(i) பலா *(ஈரசைச் சீராக்குக)*

அ. பல

ஆ. பலர்

இ. பலாக்காய்

ஈ. பற்பல

(ii) காவாக்கால் *(அலகிட்டு வாய்பாடு கூறுக)*

அ. புளிமா

ஆ. தேமாங்காய்

இ. தேமா

ஈ. புளிமாங்காய்

(iii) புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன் (இக்குறளின் ஈற்றுச் சீர் முடியும் வாய்பாட்டை அலகிட்டு கூறுக)

அ. நாள்

ஆ. மலர்

இ. காசு

ஈ. பிறப்பு

(iv) முருகன் வந்தான் (அலகிட்டு தளை கூறு)

அ. இயற்சீர் வெண்டளை

ஆ. நேரொன்றாசிரியத் தளை

இ. வெண்சீர் வெண்டளை

உ. நிரையொன்றாசிரியத் தளை

(v) சினங்காப்பான் (அலகிட்டு வாய்பாடு கூறுக)

அ. கருவிளங்காய்

ஆ. தேமாங்காய்

இ. புளி மாங்காய்

ஈ. கூவிளங்காய்

**4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்று மட்டும்) (3)**

(i) பகவன்

அ. தேமா

ஆ. புளிமா

இ. கருவிளம்

ஈ. கூவிளம்

(ii) வந்தவன்

அ. ஓரசைச்சீர்

ஆ. ஈரசைச்சீர்

இ. மூவசைச்சீர்

ஈ. நாலசைச் சீர்

(iii) தேவர் அனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்

அ. செம்மொழிச் சிலேடை அணி

ஆ. உவமை அணி

இ. பழிப்பது போலப் புகழ்தல் அணி

ஈ. புகழ்வது போலப் பழித்தல் அணி

(iv) போருழந் தொடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட

அ. எடுத்துக் காட்டு உவமை அணி

ஆ. சொற்பொருள் உவமை அணி

இ. பொருள் பினவருநிலை அணி

ஈ. தற்குறிப்பேற்ற அணி

(v) சொல்

அ. குறில் தனித்து வந்த நேரசை

ஆ. குறில் தனித்து வந்த நிரையசை

இ. குறில் ஒற்றெடுத்து வந்த நேரசை

ஈ. குறில் ஒற்றெடுத்து வந்த நிரையசை

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

(i) அ.செய்யுள் இயற்றுதற்குரிய இலக்கணம் அணி இலக்கணம்.

ஆ. செய்யுள் இயற்றுதற்குரிய இலக்கணம் சொல் இலக்கணம்.

இ. செய்யுள் இயற்றுதற்குரிய இலக்கணம் பொருள் இலக்கணம்.

ஈ. செய்யுள் இயற்றுதற்குரிய இலக்கணம் யாப்பு இலக்கணம்.

(ii) அ. கனி முன் நிரை வருவது ஒன்றாத வஞ்சித் தளை ஆகும்.

ஆ. கனி முன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித் தளை ஆகும்.

இ. கனி முன் நிரை வருவது கலித்தளை ஆகும்.

ஈ. கனி முன் நிரை வருவது இயற் சீர் வெண்டளை ஆகும்.

(iii) அ. வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் வரும்

ஆ. வெண்பாவில் இயற் சீர் மட்டும் வரும்

இ. வெண்பாவில் வெண்சீர் மட்டும் வரும்

ஈ. வெண்பாவில் இயற்சீர் வெண்சீரோடு வேற்றுச் சீர்களும் வரும்.

(iv) அ. செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது பொருள் பின்வரு நிலை அணி ஆகும்.

ஆ. செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது சொல் பின்வரு நிலை அணி ஆகும்.

இ. செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

ஈ. செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகும்.

(v) அ. இரட்டுற மொழிதல் அணியைச் சிலேடையணி என்பர்.

ஆ. இரட்டுற மொழிதல் அணியை இரட்டையணி என்பர்.

இ. இரட்டுற மொழிதல் அணியை வேற்றுமையணி என்பர்.

ஈ. இரட்டுற மொழிதல் அணியை உவமையணி என்பர்

## பகுதி – ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

ஈ.ரோட்டுக்குக் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்றிய பெருமை ஈ.வெ.ராமசாமிக்கு உரியதாகும். ஈரோட்டுக் கடைத்தெருவில் பல கடைக்காரர்கள், பொது நிலத்தை ஆக்கிரமித்து இருந்தார்கள். வேண்டியவர்களாயிற்றே என்று தயங்காமல் பகை வளருமே என்று அஞ்சாமல் உறுதியாக நின்று ஆக்கிரமிப்புகளை எடுக்கவைத்துத் தெருவை அகலப்படுத்திய அரிமா ஈ.வெ.ராமசாமி ஆவார்.

ஈரோட்டுச் சிங்கம் – ஈ.வெ.ராவின் தனிச் சிறப்புகள் சில. அவையாவன உரிமைக்காகப் போராடும் தன்மை; பொதுநலப் போஆட்டங்களுக்காக எதையும் தியாகஞ் செய்ய முனையும் போக்கு; சலிப்பின்மை; இடையறாத உழைப்பு; அஞ்சாமை. இவையனைத்திற்கும் மணி முடியாக – எல்லாரையும் மதிக்குப் பண்பு.

உரிமை வேட்கை ஈ.வெ.ராமசாமியைக் காங்கிரசில் சேர்த்தது. அப்போதைய காங்கிரசு, காந்தியார் தலைமையில் இயங்கிற்று.

**வினாக்கள்.**

(i). ஈரோட்டுக்குக் காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வந்தவர்

அ. ஈ.வெ.ராமசாமி

ஆ. ஈ.வெ.ராமு

இ. ஈரோட்டுச் சாமி

ஈ. காமராசர்

(ii). ஈரோட்டுச் சிங்கம் என்று அழைக்கப்படுபவர்

அ. காமராசர்

ஆ. பெரியார்

இ. காந்தி

ஈ. சிவப்பிரகாசர்

(iii). ஈ.வெ.ராவைக் காங்கிரசில் சேர வைத்தது அவருடைய

அ. தன்னலம்

ஆ. பதவி வேட்கை

இ. உரிமை வேட்கை

ஈ. புகழ் வேட்கை

(iv). பெரியாரின் குணங்களுள் சிறந்தது

அ. மாற்றாரை ஏமாற்றும் குணம்

ஆ. மாற்றாரைத் தூற்றும் குணம்

இ. மாற்றாரை அவமதிக்கும் குணம்

ஈ. மாற்றாரை மதிக்கும் குணம்

(v). அரிமா என்ற சொல்லின் பொருள்

அ. வரிக்குதிரை

ஆ. சிங்கம்

இ. புலி

ஈ. யானை

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

ஒலி, ஒளி என்ற சொற்களுக்கு இடையில் ஒற்றுமை இருப்பது போலவே அவற்றின் இயல்பிலும் ஒற்றுமைகள் உள்ளன. சிறப்பாக இரண்டும் அலை அலையாக அசைந்து பரவுகின்றன. ஒளிக்கு வழிவிடும் சில பொருள்கள் ஒலியை ஏனோ தடுத்து விடுகின்றன. ஒலி, ஒளி பற்றிய இந்த உண்மையை நன்கு உணர்ந்த சாத்தனார், மணிமேகலையையும் உதய

குமாரனையும் பிரித்து வைக்க ஒரு புது முறையைக் கையாண்டுள்ளார். இருவருக்கும் இடையில் அவர் எழுப்பிய பளிங்குச் சுவர் ஒளிக்கு வழிவிடும். ஆனால் ஒலியைத் தடுத்து நிறுத்தி விடும். கண்ணுக்கு வழி வைத்து காதுக்குத் திரையிடும் இவ்வழகிய மண்டபத்தைச் சாத்தனார் விளிப்பு அறை போகாது மெய்ப்பறத்திடூஉம் பளிக்கறை மண்டபம் என்று சொல்லுகின்றார். சாத்தனார் வள்ளுவர் வழி நிற்பவர் என்பதால் இச் சோதனையில் ஈடுபட்டார்.

**வினாக்கள்**

(i). ஒலி, ஒளி இரண்டும்

அ. பாயும் தன்மையுடையன

ஆ. பரவாத் தன்மையுடையன

இ. அலை அலையாகப் பரவுந் தன்மையுடையன

ஈ. அசையாத் தன்மையுடையன

(ii). கண்ணாடியில் ஒலி

அ. ஊடுருவும்

ஆ. ஊடுருவாது

இ. சிறிது ஊடுருவும்

ஈ. மேற் கூறிய எதுவும் இல்லை

(iii). ஒலி, ஒளி பற்றிய உண்மையை நன்கு உணர்ந்தவர்

அ. சாத்தனார்

ஆ. கபிலர்

இ. பாஸ்கல்

ஈ. கலிலியோ

(iv). பளிங்குச் சுவர்

அ. ஒளிக்கும் ஒலிக்கும் வழிவிடும்

ஆ. ஒலிக்கு மட்டும் வழி விடும்

இ. ஒளிக்கு மட்டும் வழிவிடும்

ஈ. இரண்டுக்கும் வழிவிடாது

(v). சாத்தனார்

அ. வள்ளுவர் வழி நிற்பவர்

ஆ. வள்ளுவர் கூற்றை மறுப்பவர்

இ. பாரதி வழி நிற்பவர்

ஈ. கம்பன் வழி நிற்பவர்

**3. கீழ்வரும் பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க. (4)**

தொடுக்கும் கடவுள் பழம்பாடற்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைதீந் தமிழின் ஒழுகும் நறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கை, அகழ்ந்

தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சி மைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இள மென் பிடியே!

**வினாக்கள்**

(i). கடவுள் பழம் பாடல் என்பது
அ. வேதத்தைக் குறிக்கும்
ஆ. இசைப்பாடலைக் குறிக்கும்
இ. பழைய பாடலைக் குறிக்கும்
ஈ. தேவார இசைப்பாடலைக் குறிக்கும்

(ii). இப் பாடலடியில் தொடை என்பது
அ. உடலுறுப்பு
ஆ. செய்யுளுறுப்பு
இ. மாலை
ஈ. பூக்கள்

(iii). அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுப்பவர்
அ. பெரியார்
ஆ. சிறியர்
இ. அடியார்
ஈ. படித்தவர்

(iv). சிமையம் என்ற சொல்லின் பொருள்
அ. மை
ஆ. மையம்
இ. உச்சி
ஈ. சிறுமை

4. விடையளிக்க. **(ஏதேனும் ஒன்று மட்டும் )** ***(5)***

*(அ)*.பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றி எழுதுக.

*(ஆ)*.கபிலர் எவ்வாறு கலிலியோவுக்கு முன்னோடி ஆகிறார்.

*(இ)*. புல்லர்களை ஔவையார் புகழ்ந்து பாடாமைக்குரிய காரணங்களை எழுதுக.

**5. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** ***(5)***

*(அ)*. கம்பர் அனுமன் வாயிலாக உரைத்த அறநெறிகள் யாவை?

*(ஆ)*. குறத்தி கூறும் குற்றால மலைவளத்தைத் தொகுத்துக் கூறுக?

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** ***(2)***

*(அ)*. இமயம் என்பது நெ.து.சு விற்கு எவற்றை நினைவுபடுத்துகிறது?

*(ஆ)*. இராமன் விளைவு விளக்குக.

**7. விரிவாக விடையளிக்க** ***(6)***

அ. மண்ணாசை என்ற கதையை கருப்பொருள் சிதையாமல் சுருக்கி எழுதுக.

ஆ. வேலை (ளை) வந்துவிட்டது - கதையை சுருக்கி எழுதுக.

**8. சுருக்கமாக விடையளிக்க** ***(3)***

அ. பங்கஜம் - கதாபாத்திரம் பற்றி எழுதுக

ஆ. பட்டாளத்தாரின் குணநலன் பற்றி எழுதுக.